809

Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

28 MAY 1923

பத்திராதிபர்: தி. ஆதிநயினார்.

புத்தகம் 6. } உருத்திரோற்காரி ௵ சித்திரை ௴ 1923-௵ ஏப்ரல் ௴ { சஞ்சிகை 1.

விஷய சூசிகை.

விஷயம்.		பக்கம்
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி	... 1
2.	கௌவை சொல்லின் எவ்வர்க்கும் பகை	... 2
3.	தருமசீலன் ஆறாவது வருடத் தொடக்கம்	... 3
4.	தேச க்ஷேமம் எப்பொழுதுண்டாகும்	... 4
5.	தருமோபதேசம்	... 7
6.	நோன்புக் கதைகள்	... 9
7.	ஜலஸ்தம்பமும், சென்னையும்	... 14
8.	சிரிக்கும் தீர்மானங்கள்	... 18
9.	தஞ்சையில் ஜைன ஸமஸ்கிருத பாடசாலை	... 19
10.	தருமசீலன் ஆறாவதாண்டின் வாழ்த்து	... 21
11.	பிராணிகளைப் பற்றிய ஆச்சரியங்கள்	... 22

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS, MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராத நூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள் முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணு 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களையே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினார், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6	உருத்திரோற்காரிஷு சித்திரைமீ 1923ஷு ஏப்ரல்மீ	சஞ்சிகை 1.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பேதைமையின் பயன்.

"பேதைமை யென்னும் வித்திற் பிறந்துபின் வினைக ளென்னும்
வேதனை மரங்க ணறி வேட்கைவேர் வீழ்ந்து முற்றிக்
காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட் டவலம் பூத்து
மாதுய ரிடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்."

(இ-ள்.) "அறியாமை யென்னும் வித்தினிடத்தே தீவினைகளென்னும் வேதனைமரங்கள் முன்னேபிறந்து பின் வெளியில் தோற்றி, ஆசையென்கிற வேரை வீழவிட்டு, தாம்முதிர்ந்து, பெறாததன் மேற்செல்லும்காதலும் பெற்ற தன் மேற்செல்லும் களிப்புமென்னும் கவடுகளைவிட்டு, வருத்தமென்னும் மலரைப்பூத்து, பெரியதுயரத்தைத் தரும் கவலை யென்னும் காயைக்காய்த்து, மரணத்தைத் தருகின்ற மயக்கமென்னும் கனியை உடம்பு அனுபவிக்கும்படி பழுத்துத்தந்து, பின்னும் அங்ஙனம் பூத்துக்காய்த்துப் பழுத்தற்கு நிலைபெற்றிருக்கும்." என்பதாம்.

(வி-ரை.) மனிதரிடத்தே அறியாமை யுண்டானல் அதிலிருந்து தீவினைகளுண்டாகும்; அவற்றால் உலகப்பற்றாகிய ஆசை உற்பத்தியாகி அவற்றை உறுதிப்படுத்தும்; அவ்வுலகப் பற்றினால் பெறாதபொருளின் மேல் இச்சையும், பெற்றதன்மேல் ஆனந்தமுமுண்டாகும்; இவ்விரண்டும் அதிகப்பட்டபோது பெறாததைப் பெறச்செய்யும் முயற்சியாலும், பெற்றதை அனுபவித்தலால் உண்டாகும் ஆனந்தத்தால் மேலும் மேலும் துர்ச்செய்கைகளைச் செய்தலாலும் தேகவருத்த முண்டாகும்; அவ்வருத்தத்தால் மனக்கவலை யுண்டாகும்; அக்கவலையால் மரணமுண்டாகும். அத்தீவினைகள் இவற்றை யெல்லாம் செய்துவிட்டு அடுத்த ஜன்மத்திலும் தொடர்ந்து இவற்றைச் செய்வதற்கு நிலைத்து நிற்கும். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் அறியாமையே. ஆதலின், அறியாமையை அகற்றவேண்டும். அங்ஙனம் அகற்றினால் துக்க நிவர்த்தியுண்டாய் மோக்ஷம் கைகூடும். பேதைமைவித்தும், தீவினைகள் மரங்களும், ஆசை வேரும், காதலுங்களிப்பும் கவடுகளும், அவலம் பூவும், இடும்பை காயும், மரணம் கனியுமாக உருவகிக்கப்பட்டன. வேட்கை-உலக அனுபவங்களின் மேற்செல்லும் பொதுவான பற்று. காதல்-அடையவெண்ணிய ஒரு பொருளின் மேற்செல்லும் விருப்பம். நாறுதல்-தோற்றுதல். கவடு-கிளைகள். அவலம்-வருத்தம். இடும்பை-கவலை. கனிதல்-உடம்புபோதல். தீவினைகள் நிலைபெற்றிருப்பனவாதலின் நிற்குமென்றார் ஆசிரியர்.

(சீவகசிந்தாமணி. 1389)

28 MAY 1923

தருமசீலன்.

உருத்திரோற்காரிஸு சித்திரைமீ.

"கௌவை சொல்லின் எவ்வர்க் கும்பகை"

இதன் பொருள்:—"கௌவை சொல்லின்-(ஒருவன் மற்றவருடைய) பழியை எடுத்துக் கூறுவானாயின், (அவன்), எவ்வர்க்கும்-எல்லோருக்கும், பகை-விரோதியாவான்" என்பதாம்.

ஒரு மனிதன், பிறரைப்பற்றி, மற்றொருவரிடத்தில் நிந்தை மொழி கூறுவானாயின் அவர், 'நம்மையும் இப்படித்தான் பிறரிடம் கூறுவான், என்று அவன்மீது வெறுப்படைவாரே யன்றித் திருப்தியடைய மாட்டார். இவ்வாறே பிறர் பழியைக் கூறுவோன் பலரிடத்தும் அதனைக் கூறக்கூற அவனுக்குப் பலருடைய விரோதமும் ஏற்பட்டுவிடும்; அதனால் அவனைக் கண்டவர்களெல்லோரும் அருவருத்துச் சமீபத்தில் சேர்க்கமாட்டார்கள். முடிவில் அவன் உலக விரோதியாய்ப் பிறர் சகாயமின்றிப் பல வழியிலும் கஷ்டப்பட்டு இறந்த பின்னரும் துர்க்கதியே அடைவான். இவ்வாறு இது துர்ச்செய்கையாயிருந்தும் இக்காலத்தில் சிலர், சுயநலங்கருதித் தனவந்தர்களிடத்திலும், அரசர்களிடத்திலும் அடுத்திருந்து பிறர் பழிகளையே எடுத்துக்கூறி அவர்களால் வெறுத்துத் தள்ளப்பட்டு முடிவில் பலர்க்கும் விரோதிகளாய் ஜீவனத்திற்கும் கஷ்டப்பட்டொழிவதைப் பிரத்தியக்ஷமாகக் காணலாம். ஆதலின், உலகத்தில் நன்மையடைய நாடுவோர் இத்தீச்செயலை ஒழித்து விடவேண்டும். உலக நன்மையைக்கோரி ஒளவையார் கூறிய இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகவேண்டும். இத்தகைய பிறர்பழியைக் கேட்டுத் திருப்தியடையும் சில அறிவிலிகளும் உண்டு; அவர்களிடத்தில் பிறர்பழி கூறுவோர் காரியம் சிறிது காலம்வரை நிறைவேறும்; எனினும், சொற்ப காலத்திற்குள் இருவருமே கெட்டொழிந்து போவார்கள். இதுவும் பிரத்தியக்ஷம். ஆதலின், எவரும், பிறர் நிந்தைகளைக் கேட்பதையும் ஒழித்து விடவேண்டும்.

(திருவருட்சகாயம்.)

10449

தருமசீலன் ஆறுவது வருடத்தொடக்கம்.

கனவான்களே!

நம் சீலனுக்கு ஐந்தாவது ஆண்டு பூர்த்திபெற்று இந்தச் சித்திரையில் ஆறுவது வருடம் ஆரம்பமாகிறது. கடுதாசி விலை முதலியன அதிகப்பட்ட காலத்தில் சீலன் ஆரம்பிக்கப்பட்டதெனினும், குறைந்த சந்தாவையுடையதெனினும் நம் பத்திரிகாபிமானிகளின் பேருதவியைக்கொண்டும், நம்முடைய விடாமுயற்சியாலும் இங்கு ஐந்து வருடகாலமாக யாதோரிடையூறுமின்றி நடைபெற்று வருகின்றது. இனியும் இது பல்லாண்டு பல்லாண்டாக நிலைத்தோங்கி வளருமென்றே நாம் உறுதி கொண்டிருக்கின்றோம். சீலன் சிறப்பாக ஜைனமதாபிவிருத்தியைக் கோரியதாதலின், ஆரம்பத்தில் பெரும்பாலும் இதற்கு ஜைனர்களே சந்தாதாரர்களாகச் சேர்க்கப்பட்டார்கள். குறைந்த சந்தாவும் ஏற்படுத்தப்பட்டது. சந்தாதாரர்களிடத்தில் முன் பணம் வசூல் செய்யாமல் அவர்கள் கொடுக்கும்போது பெற்றுக்கொண்டு பத்திரிகை நடத்தப்பட்டு வந்தது. அங்ஙனம் நடத்திவந்தும் இரண்டு வருடங்களுக்கு மேல் பத்திரிகையால் ஒரு சமூகத்தாருக்கு மிக்க நன்மையுண்டென்பதை யுணராமையாலோ, ஒற்றுமைக் குறைவாலோ, வேறெக் காரணத்தாலோ நம் ஜைன சகோதரர்களில் சிலர் பத்திரிகை வாங்குவதினின்றும் நழுவிக் கொண்டார்கள். எனினும் அதனால் சீலனுக்கொரு குறைவும் நேரவில்லை. ஏனெனில், விலகியவர்களுக்கு இரண்டத்தனை பேர் பிறமதஸ்தர்களில் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விட்டார்கள்; இன்னும் சேர்ந்து கொண்டே வருகிறார்கள். இதற்குக் காரணம் பத்திரிகையின் நன்மையே. இவ்வாறு சந்தாதாரர்கள் மேலும் மேலும் சேர்வதால் நாம் உற்சாகத்தோடு பத்திரிகையை நடத்தி வருகிறோம். எனினும், நம்பழைய சந்தாதாரர்களில் பலர் சந்தாத்தொகையைச் செலுத்தாமல் வைத்துக் கொண்டிருப்பதால் நாம் சிற்சில சமயங்களில் சொந்தப்பணச் செலவினாலும் பத்திரிகையை நடத்தவேண்டிய ஒரு கஷ்டம் ஏற்படுகிறது. ஆதலின், சந்தாநேயர்கள், எமக்கு அக்கஷ்டம்நேராதிருக்கும்படி சந்தாத்தொகைகளைச் செலுத்தியும், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்தும் உதவிசெய்து சீலனை நீடூழிகாலம் நிலைக்கச் செய்யுமாறு விரும்புகிறோம். இது முதல் இன்னும் நல்ல விதத்தில் நம் பத்திரிகை வெளிவரும். புதிதாக இதற்குச் சந்தாதாரராகச் சேருவோர் மிக்க நலம்பெறுவார்களென்பது திண்ணம். நம்

நோக்கங்கள் நிறைவேறுமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவானுக.

பத்திராதிபர்.

தேச க்ஷேமம் எப்பொழு துண்டாகும்?

இந்திய சகோதரர்களே! இத்தலையங்கவினு நம் நாட்டின் நன்மையைக் குறித்ததாயிருப்பதால் இதற்கு விடையான விஷயங்களை நாம் ஆராய்ந்துணரக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம். இதைப் பற்றி ஆழ்ந்து யோசிக்கும்போது சிற்சில விஷயங்கள் நம் புத்தியில் தோற்றுகின்றன. இக்காலத்தில் தேச நன்மைக்கான முயற்சிகள் பல வழிகளிலும் நடந்து வருகின்றன; தேசாபிவிருத்திக்கான விஷயங்களை ஜனங்கள் விரைந்து செய்யவேண்டுமென்று பற்பல பத்திரிகைகளும் புத்தகங்களும் பறையடித்து முழக்கி வருகின்றன. பேசுவதில் நிபுணாரகிய பலர் இதைப்பற்றி அடிக்கடி பிரசங்க மேடைகளில் பிரசங்கமாரி பொழிகின்றார்கள். இவற்றால் உண்டாகியிருக்கும் பயன் என்னவெனில், தேச க்ஷேமம் உண்டாக வேண்டுமென்னும் எண்ணம் ஜனங்களுடைய மனதில் கனவில் தோன்றுவது போல் அடிக்கடி தோன்றுவதும் மறைவதுமா யிருக்கின்றது. சிலர் பத்திரிகைகளைப் படித்தபோதும் பிரசங்கங்களைக் கேட்டபோதும் இவ்வெண்ணத்தை மனதில் வைத்துப் பத்திரிகைப்படிப்பும் பிரசங்கக் கேள்வியும் நீங்கியவுடனேயே மறந்து விடுகிறார்கள். சிலர் மட்டும் இந்நினைப்பை மனதில் வைத்துக்கொண்டே யிருக்கிறார்கள். அவர்களுட் சிலர் நாட்டு நன்மையின் பொருட்டுச் சிற்சில முயற்சிகளைச் செய்து வருகின்றார்கள். சில புண்ணிய புருஷர்கள் இதற்கு உடல் பொருள் ஆவி மூன்றையுமே தத்தஞ்செய்து மிக்க உழைப்பெடுத்து வருகின்றார்கள். பலர் தேசாபிமானத்தை விட்டு அதற்கு நேர் மாற்றமான இடையூறுகளைப் புரிந்து வருகின்றார்கள். இத்தனை விகற்பங்களால தேச நன்மையானது, மேகக் கூட்டத்தினிடையே மின்னல்தோன்றி மறைவதுபோல், சிறிது தோன்றுவதும் மறைவதுமாயிருந்து வருகின்றது. இப்படித்தோன்றி மறைவதால் பயனில்லை. இவ்வாறு தோன்றுவது மறையாமல் நிலை பெற்றொளிரவேண்டும். அப்பொழுது தான் தேச க்ஷேமமுண்டாகும். மேற்கூறியபடி தேசநன்மை தோன்றி மறைவதற்குச் சில காரணங்களுண்டு; அவற்றை நாம் அடியோ டொழிக்கவேண்டும்; அங்ஙன

மொழிப்போமானல் விரைவில் தேசக்ஷேமம் கைகூடி நிலைத்து விடும்.

நாம், தேச நன்மையின் பொருட்டு ஒழிக்க வேண்டியவை யெவையெனில், நம்மவர்க்குள் மனவிகற்பத்தை யொழித்து விட வேண்டும்; ஒற்றுமைக் குறைவை ஓட்டவேண்டும்; பொருமையைப் போக்கவேண்டும்; விரோதப் பான்மையை விலக்கவேண்டும்; ஒருவர் செய்யும் தொழிலுக்கு மற்ருெருவர் செய்யும் இடையூறுகளை அகற்றவேண்டும்; ஒவ்வொருவரும் சுயநலம் பாராட்டுவதை நீக்க வேண்டும்; நமக்கவசியமில்லாத புறநாட்டுச் சாமான்களை வாங்குவதை ஒழிக்கவேண்டும்; அன்னிய நாட்டுப் போலிபாசாரங்களை அகற்றவேண்டும்; அன்னிய பாஷைகளை வேதம்போல் கருதுவதை விலக்கவேண்டும்; வீண் இடம்பச் செலவுகளை விலக்கவேண்டும்.

கைக்கொள்ளத் தக்கவை யெவையெனில், இந்து தேசத்தின ரெல்லோரும் பாரதமாதாவாகிய ஒரே தாயின் வயிற்றுப் பிள்ளைகளென்ற சகோதர வாஞ்சையைப் பெறவேண்டும்; மனவொற்றுமை யடையவேண்டும்; பல பேர் ஒன்று சேர்ந்து வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றை விருத்தி செய்யவேண்டும்; ஒருவர்க்கொருவர் உபகாரிகளா யிருக்கவேண்டும்; மற்ருெருவர்க்கு வந்த தீங்கைத் தமக்கு வந்ததுபோல் பாவிக்கவேண்டும்; பெரும்பாலும் நம் நாட்டுப் பொருள்களையே உபயோகிக்கவேண்டும்; சுயபாஷையை விருத்தி செய்யவேண்டும்; நம் தேசாசாரங்களைக் கைக்கொள்ளவேண்டும்; வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும்.

இக்காரியங்களையும் இவைபோன்ற பிறவற்றையும் நாம் செய்து வருவோமானல் வெகு சீக்கிரத்தில் தேச நன்மை ஏற்பட்டுவிடும். இவற்றைச் செய்வது ஒவ்வொருவருக்கும் கஷ்டமன்று, மிகச் சுலபமே. எல்லோரும் ஒரே மனதாய்விட்டால் இவையெல்லாம் ஒரு நிமிஷநேரத்தில் நிறைவேறிவிடும். இவற்றிற்கெல்லாம் மனவொற்றுமைதான் காரணம். மனவிகற்ப முண்டானல் ஒரு சிறு காரியமும் நிறைவேறமாட்டாது. மனவொற்றுமையால் பெருங்காரியமும் எளிதில் நிறைவேறிவிடும். இவற்றைவிட்டு எத்தகைய பெருங்காரியங்களைத் தொடங்கினும் பலனடைவது கஷ்டமாக முடியும். ஆதலின், நாம் பெரிய நன்மையை அடைதற்கு இச்சிறுகாரியங்களை முதலிற் செய்யவேண்டும். இவைகளே நாம் அடைய விருக்கும் பெரிய நன்மைகட்கு அடிப்படையாம்.

கனவான்களே! "பெரிய பெரிய மேதாவிகளெல்லாம் தேச நன்மையின் பொருட்டு எத்தனையோ பெருங் காரியங்களையெல்லாம் செய்து வருகின்றார்கள்; எவ்வளவோ பெரிய மார்க்கங்களையெல்லாம் கூறுகின்றார்கள்; அப்படியிருக்க இவர் என்ன விசேஷமாகச் சொல்லிவிட்டார்" என்று எம் கூற்றுக்களை ஏளனம் செய்ய வேண்டாம். அவ்வாறு பெரியோர்கள் பெருங்காரியங்களைச் செய்து வருவதுண்மையே; அவர்கள் எவ்வளவுதான் செய்தவரினும் பொது ஜனங்களிடத்தில் நாம் கூறிய இச்சிறு காரியங்கள் ஏற்படுவது அருமையாயிருக்கின்றது; நம்மவர் பெரும்பான்மையும் ஒருவர்க்கொருவர் விகற்பப்படுவதையே விரும்புகிறார்கள்; ஒருவர் செய்யுங் காரியத்தை மற்றொருவர் கெடுப்பதிலேயே திருஷ்டியா யிருக்கிறார்கள்; ஒருவர்க்கொருவர் விரோதமாவதிலும், கெடுதி செய்வதிலும், ஒருவரையொருவர் தாழ்த்துவதிலும், சிலர் சுயநலம் பாராட்டுவதிலும், தற்பெருமையடைவதிலும், பிறர் வாழ்க்கையில் பொறாமைப்படுவதிலும், பிறரை ஜன்ம விரோதிகளைப்போல நினைத்து அவரை உறுமுவதிலும், அனுவசியமாக ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்வதிலுமே புத்தியைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் அடாச்செயல்களுள் ஒன்றைமாத்திரம் உதாரணங் காட்டுகிறோம்; அதைக்கொண்டு மற்றவற்றைத் தெளிந்து கொள்ளுங்கள். புகைவண்டியில் முன்னே ஒருவர் ஏறிக்கொள்கிறார். அவரிருக்குமிடத்தில் இன்னுஞ் சிலபேர் இருக்க இடமிருக்கின்றது. அப்படியிருந்தும் அவர், இங்கே எவரையும் ஏற விடாதிருந்தால் நமக்குச் சௌகரியமா யிருக்குமென்று சுயநலத்தைக் கருதி யிருக்கின்றார். அத்தருணத்தில் மற்றொருவர் ஐந்தாறு குழந்தைகளுடனும் மூட்டை முடிச்சுக்களுடனும், மனைவியுடனும் வேறெங்கும் இடமகப்படாமல் திரிந்தலைந்து வண்டி புறப்படும் சமயம் நெருங்கவே திகிற்பட்டு அந்தச் சுயநலப்பிரியர் இருந்த வண்டியில் ஏறப்போகிறார்; அந்தோ! பரிதாபம்! அவர் இவரை ஜன்ம விரோதியைப்போல நினைத்து இவரையும் அந்தக் குழந்தை குட்டிகளையும் சீறிப் புலிபோற் பாய்ந்து கீழே தள்ளிவிடுகிறார். இஃதெத்தகைய கொடுஞ்செயல் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்; தேசநன்மையின் பொருட்டுப் பிரசங்கம் புரிந்துவிட்டு அப்பொழுதுதான் வந்து வண்டியிலேறிய ஒரு விவேகஸ்தரும்கூட இத்தகைய கொடுஞ்செயலை மனங்கூசாது செய்து விடுகின்றார். இவற்றைப்போலவே மற்ற அக்கிரமங்களும் நடைபெறு

கின்றன. இன்னும் சிலர் தேச நன்மைக்குப் பாடுபடுகிறோமென்று பேர் வைத்துக்கொண்டு அதன் மூலமாக ஜனங்களை ஏமாற்றிப் பொருள் கவர்ந்து சுயநலத்தை இரகசியமாக நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். சிலர் பகலெல்லாம் நற்பிரசங்கங்கள் புரிந்துவிட்டு இரவெல்லாம், தாங்கள் பிரசங்கத்தில் கூடாவென்று சொன்னதீச் செயல்களை யெல்லாம் இரகசியமாகப் புரிகின்றார்கள். சில மகாத்மாக்கள், ஜனங்களின் நன்மையின் பொருட்டு உடல்பொருள் ஆவி மூன்றையும் வழங்கிப் படாதபாடெல்லாம் படுவதை இவர்கள் சிறிதேனும் சித்தத்தில் கருதுவதில்லை. இத்தகைய சிறுகுணங்கள் நம்மவரில் பெரும்பான்மையோரிடத்தில் இருக்கும் வரையிலும் தேச நன்மை எங்ஙனம் ஏற்படும்? ஆதலின், இச்சிறு கெடுதிகளை ஒழித்தால் பெரிய நன்மை, தானே ஏற்பட்டு விடுமென்பது எமது புத்தியில் தோன்றியது. அதனாலேயே இவற்றை எழுதத் துணிந்தோம். தேச நன்மைக்குப் பாடுபடும் பெரிய மகான்களுரைக்கு முன் எம்முரை சந்திரனுக்கு முன் தோன்றும் மின்மினிபோன்றதெனினும் இதில் தேச நன்மைக்கு அடிப்படையான விஷயங்களடங்கி யிருப்பதால், தேசாபி விருத்தியைக்கருதும் சகோதரர்கள் ஒவ்வொருவரும் இதைக்கவனித்து இதிற்காட்டிய நல் விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படி ஆங்காங்கே ஜனங்களுக்குப் பிரசங்க வாயிலாக உபதேசித்து நம் நாட்டில் தருமம் தலை யெடுத்தோங்கச் செய்யுமாறு விரும்புகிறோம். இதில் காட்டப்பட்டிருக்கும் நல் விஷயங்களை அனுஷ்டித்து வந்த தேசத்தின ரெல்லோரும் செழிப்புற்றோங்கி வளர்ந்து வருவதைப் பிரத்தியக்ஷ அனுபவத்தாற் காணலாம். ஆகலின், நம் நாட்டவரும் ஒற்றுமையைக் கடைப்பிடித் தொழுகுவார்களாயின் ஒப்பில்லா உயர்வுறுவார்களென்பது உறுதி.

பாரதன்.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-12, பக்கம்-288.)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தங்குலத்தை யுயர்த்துதற்குச் சூழ்ச்சி செய்து
சாஸ்திரங்கள் தமைப்புரட்டி யெழுது வோரும்
மங்காத வேர்குலத்திற் கிழிவு தோன்ற
வஞ்சனையாய் நூல்புரட்டி வரைகு வோரும்

சங்கட்மாம் புகைவண்டி தன்னி லென்றும்
தம்மினத்தார்க் கிடங்கொடுத்துப் பிறர்வந்திட்டால்
பொங்கியகோ பத்துடனே தள்ளு வோரும்
பொல்லாத தீக்கதியிற் புகுவா ரம்மா. (கூஎ)

எக்குலத்தா ராளுலுங் கல்வி மேன்மை
யெய்தியவ ரேசிறந்தா ரென்றெண் ணுமல்
தக்ககல்வி யிலரெனினும் மேற்குலத்தைச்
சார்ந்தவர்க்குச் சபைகளிற்சன் மானஞ் செய்து
மிக்ககல்வி யுளரெனினுங் கீழ்க்குலத்தை
மேவினரை யவமதிப்போர் மிடிக்கு ளென்றும்
சிக்கியுழன் றுலகினுக்குச் சுமைய தாகிச்
சீரழிந்து நிந்தையுற்றுத் திரிகுவாரே. (கூஅ)

எப்பொழுதும் துர்ச்செயலே தொழிலாக்கொண்ட
வியல்பினரைக் கதைப்பிரசங் கஞ்செய் தற்கு
ஒப்பி யென்றும் நியமித்துக் கும்பு கூடி
உள்ளதெய்வ பக்தியெல்லா மொழித்து விட்டுத்
தப்பிதமா வவர்கள்சொல்லும் விகடப் பாட்டைத்
தான் கேட்டுச் சிரிப்பவர்க்குக் கடவுள் சாபம்
இப்புவியில் கிடைப்பதுண்மை பக்தி யாளர்
இயற்றுகதா சிரவணமே சிறந்த தாமே. (கூகூ)

இத்தரும வுபதேசந் தனைப் படிப்போர்
இன்புடனே கேட்டிடுவோர் பிறர்க்குச் சொல்வோர்
சித்தமிசைந் திதன்படியே நடப்போ ரென்றுந்
தெய்வவருள் கிடைத்திடப்பெற் றுலகின் மீது
நத்துசெல்வம் மனைவாழ்வு கீர்த்தி மிக்க
நலம்பெறுசந் ததிகளுடன் விளங்கி மேலும்
முக்திநிலை யடைந்துசதா விலகிடாத
முழுச்சுகத்தை யெய்திடுவர் சுபம தாமே. (க00)

தருமோபதேசம்.

முற்றுப்பெற்றது.

நோன்புக் கதைகள்.

கர்மநிர்ச்சரை நோன்பு.

ஓம் ஸ்ரீவர குருபஞ்ச க்ரமம் பாவிசினும் கர்ம நிர்ஜ்ஜப சுத்கதேயம். வியாவர்னீ சுவேம் பௌவிய, ஜெனுவளிக கஹார மனம் ரத லக்ஷமீகாம்.

ஜம்பூத்வீபத்து பரதக்ஷேத்திரத்து மகததேசத்து ராஜக்ரஹ நகராதிபதி சிரேணிக மஹா மண்டலேஸ்வரனென்பான். அவனுடைய பட்டத்தரசி சேலினி மஹாதேவி என்பாள். இவ்விருவரும் சுக சந்ததா, விநோதத்தோடு ராஜ்பம் பண்ணி வருகின்ற காலத்தொருநாள், உட்டோலகம் கொடுத்திருந்த பிரஸ்தாபத்தினால் ஒரு ரிஷிநிவேதகன், வந்து அம்மன்னனைக் கண்டு சாஷ்டாங்க ப்ரணுதனாகி அவனிடத்தில், "தேவனே! நின்னுடைய புண்ணியோதயத்தினால், விபுலாசலமென்கின்ற பர்வத, மஸ்தகத்தில், ஸ்ரீ வர்த்தமானஸ்வாமி சமவசரணமவதீரணமாச்சுது" என்று விண்ணப்பம் செய்தான். உடனே மன்னன் அந்தத் திசையை நோக்கி எழடி நடந்து சாஷ்டாங்கப்ரணுதனாகி, ரிஷிநிவேதகனுக்குத் தான் அணிந்திருந்த பூஷணங்களைக் கொடுத்து, ஆனந்தபேரியறைவித்து, பரிஜன புரஜன சமன்விதனாகி, பாத மார்க்கத்தில் போகி, அச் சமவசரணமடைந்து கந்தகுடியைத் திரிப்ரதக்ஷணம் பண்ணி, அருகத் பரமேஸ்வரனை அநேகஸ்துதி சத சகஸ்ரங்களினால் ஸ்துதித்து, அநேகார்ச்சனைகளினால் அர்ச்சித்து, வந்தித்து, குருபக்தி பூர்வகம் கௌதம கணதராதி ரிஷி சமுதாயத்தை எதாக்ரமத்தினால் வந்தித்து, மனுஷ்ய கோஷ்டத்திலிருந்து கௌதம சுவாமிகளிடம் கரகமல முகுளிதனாகி அவரைநோக்கி, "சுவாமியே! கர்மம்போகிறதற்கு உபாயமாக எனக்கு யாதானுமொரு நோன்பைக் கூறியருளவேண்டும்" என்றான். அதற்கவர், "கர்மநிர்ச்சரை நோன்பு நோற்றால் கர்மங்கெடும்; அதை நோற்றவர்கள் கதையும் அதன் விவரமும் சொல்லுகிறேன் கேள்; உஜ்ஜயனீ என்னும் பட்டணத்தில், பிறப்பாளையத்துக் கவுண்டன் பலபத்ரனென்பான். அவனுக்குப் புத்ரர் எழுவர். அவர்களுக்கு எழுவர் மனைவியர். இவர்கள் வாழ்ந்து வருங்காலத்து, எத்ராஸ்ரமிதவசிகளான தபோதனத் அந்தக் கிராமத்திற்குச் சென்று அந்தக் கவுண்டனுடைய க்ரஹத்திற்குப் பின்னே காயோத் ஸர்க்கமாகி நின்றார். மேற்கூறிய பெண்களுள் இளையாள் விடிய ஒரு ஜாமமிருக்கையில் எழுந்திருந்து அவர்

நின்றதையுணராமல் குப்பையையும் சாணியையும் வாரி அந்தத் தபசிகள் மஸ்தகத்தில் போட்டனள். அப்போது பலபத்ரகவுண்டன் க்ராஹத்து நின்று புறப்பட்டுவந்து உபசர்க்கத்தில் நின்றுகொண்டிருந்த ரிஷியரைக்கண்டு, அவருடைய மஸ்தகத்திலிருந்த குப்பையையும் சாணியையும் பரிகரித்து, அவரை நோக்கி "உபசர்க்க நிவாரண மாச்சுது, கை எடுத்துக் கொள்ளும்" என, அவர் எழுந்தருளினர். அதன்மேல் அந்தப்பெண் காலாந்தரத்தில் பாவாந்தரத்தையடைந்து ஒரு வைசியனுக்குப் புத்ரியாகி ஜனித்தனள். அவள் ஜென்மித்த மாத்திரத்தில் அவளுடைய மாதா பிதா பந்து ஜனங்கள் மரித்தனர். பின்னர் அவள் கர்மி என்னும் பெயரையடைந்து அனுதையாகி, ஸ்ரீமத்தி, யாரியாங்கனைகளையடைய அவர்கள் அவளைஉதாசினம் பண்ணினார்கள். பின் அவள் அந்த ஆரியாங்கனைகளுக்கு வையாப்ரத்யம் பண்ணுகிற ஸ்ராவகரையடைய அவர்ளும் அவளை உதாசினம் பண்ணினார்கள். இப்படியே அவள் எங்குச் சென்றாலும் பலராலும் தூஷணை பண்ணப்பட்டாள். இப்படி இருக்கின்ற சமயத்தில் அவள், ககனமார்க்கத்தினின்றும் அவனிதலத்தில் அவதரித்து நின்ற ஒருசாரண முனீஸ்வரரைக்கண்டு குருபக்திபூர்வகமாய் வந்தித்துக் கரகமல முகுளிதையாகி அவர்முன் நின்றாள். அப்படி நின்றவளை சாரண பரமேஷ்டிகள் பார்த்து, 'கர்மி! இந்த ஆஸ்வியுஜமாசத்து சுக்லபக்ஷத்து பஞ்சமிதினத்தில் கர்மநிர்ச்சரை நோன்பை அனுஷ்டித்தால் கர்மம்போம்' என, அவள் 'அப்படியாகில் அந்த நோன்பையும் அதை அனுஷ்டிக்கும் விதத்தையும் கூறியருளவேண்டும்' என்றாள். அவர், 'ஸ்ரீபஞ்சபரமேஷ்டிகள் பிரதிமைகளை எழுந்தருளப்பண்ணி அப்பிரதிமைகளைச் சூழக்கோலமிட்டு, வெல்லத்தினால் சைத்தியாலயம் பண்ணி, கருப்பங் கழியினால் தூண்நிறுத்தி, புஷ்பமாலைகளினால் அலங்கரித்து, சாந்தினால் மெழுகி, குங்குமத்தினாலும் கற்பூரத்தினாலும் கோலமிட்டு, சுசீர்பூதராகி உபவாசம்பண்ணி ஜாகரமிருந்து, ராத்திரி நாலுஜாமம், ஜாமந்தோறும் அபிஷேகம்பண்ணி அந்தப் பசஞ்பரமேஷ்டிகளுக்கு அஷ்ட விதார்ச்சனைக்குரிய மந்திரங்களைச் சொல்லி, ப்ரத்தியேகம் ஜலாதிகளைக்கொண்டு அஷ்ட விதார்ச்சனைகள் ஐந்துதரம் பண்ணவேண்டும். சாந்திதாரா புஷ்பாஞ்சலியும் பண்ணவேண்டும். மந்திரம் சொல்லி ஜலகந்தாக்ஷதாதிகளினால் அர்ச்சிக்க வேண்டும். புஷ்பசகிதம் அர்க்கியம் கொடுக்கவேண்டும். ஸ்ருத குருக்களையும் பூஜித்து அவரிடம் தர்ம கதையையும் கேட்டுப் பொழுது விடிந்தபிறகு பருப்

புப் போட்டுப் பொங்கின அசனம், மோர்வார்த்துப் பொங்கின அசனம், கடுகு புளி எள்ளு மிஸ்ரமான அசனம் ஆகிய இவைகளெல்லாம் கூட்டி ஒன்பது புதுச்சட்டியிலிட்டு மேலே மண்டுகையினாலே மூடி, உலே மூடியினுல் மூடி, சுவர்ணசகிதம் ஒன்பது புதுக்கிண்ணியில் நெய் நிறைத்துவைத்து, தேவர்க்கொன்று, ஸ்ருதத்திற்கொன்று, குருக்களுக்கொன்று, தனக்கொன்று வழங்கி, மீந்த ஐந்து பாயனத்தையும் சம்மிய த்ருஷ்டிகளான மங்கல்ய ஸ்திரீகளுக்குக் கொடுக்கவேண்டும். தருமகதையும்கேட்டுக் கதைசொன்ன ஆசாரியனேயும் பூஜித்து சாதுர் வர்ணத்துக்கு எதாசக்தி சதுர்விததானமும் பண்ணிப் பின்னே பாபனே பண்ணவேண்டும்' என்று உத்யாபனக்ரமம் சொல்லி எழுந்தருளினர். பின்னர் அவர் சொன்ன கிரமத்தின்படி, கர்மி, நோன்பு நோற்றுவந்தனள்.

அப்போது, அந்தப் பட்டணத்தில் ராஜாவின் மகன் சர்ப்பதஷ்டனுகி மரிப்ப, ராஜாவின் தேவி மிகவும் சங்கிலேச சித்தையாய், "நான் புதல்வனுக்குக் கல்யாணம் பண்ணி அச்சிறப்பைப் பார்க்கவில்லையே" என்று வருந்தினுள். அரசன், 'இறந்த புதல்வனுக்காவது விவாகஞ்செய்து உன் மனக்குறையைத் தீர்க்கிறேன்' என்று மனைவிக்குச் சொல்லிவிட்டு, ஆயிரம் பொன்களடங்கிய கிழிகட்டி அதை வேணுதண்டத்தில் கட்டி 'சத்குல பிரசூதையான கன்னிகையை என் குமாரனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறவள் எவளோ அவளுக்கு இந்தப் பொற்கிழியைக் கொடுப்பேன்' என்று நகரத்தில் பறையறைவித்து அக்கிழியுடனே சுற்றிவரும்படி பணியாளரை விடுத்தான். அந்தப்பேரிகை முழக்கமும் பொற்கிழியும் கர்மியினுடைய வாசலுக்குவர, அந்த விர்த்தாந்தத்தைக் கர்மி கேட்டு, அந்தப் பொன்முடிப்பை வாங்கிக்கொண்டு ஆர்யாங்கனேகளிருந்த முனிவாசத்திற்கு அப்பணியாளரை அழைத்துவந்து காட்டி அதன் விருத்தாந்தம் கூற, அஜ்ஜிகை அந்த விர்த்தாந்தத்தைக் கேட்டு, 'ஹீனமே! சவத்தைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதுமுண்டோ' என்று அவளைக்கோபிக்க, அந்த வைசியபுத்ரி அவ்வார்த்தையைச் சட்டை பண்ணுமல் அந்தப் பொன்னேவாங்கித் தானத்திற்கும் பூஜைக்கும் நோன்புக்கும் உத்யாபனத்திற்கும் செலவிடலாமென்று எண்ணங்கொண்டவளாகித் திரும்பி அரண்மனையை அடைந்து ராஜாவையும் தேவியையும் கண்டு வணங்கித் தான் இராஜகுமாரனே மணந்து கொள்வதாகக் கூறினள். உடனே அவர்கள் கர்மியை ஆபரணங்களையும் அபூர்வமான வஸ்திரங்களையும்

அணிந்துகொள்ளச் செய்து, அந்தக் கர்மிக்கும் இறந்த ராஜகுமாரனுக்கும் விவாக விதியையும் முடித்துப் பிறகு சவ சமஸ்காரம் செய்ய ருத்ர பூமிக்குச் சவத்தைக் கொண்டுபோனார்கள். அப்போது சூரியன் அஸ்தங்கதனானான். அந்தப் பட்டணத்து ஜனங்களுக்கு வழிதெரியாமல் இருளானது அதிகப்பட்டிருந்ததனால் அவர்கள் பொழுது விடிந்தபிறகு தகனக்கிரியை செய்யலாமென்று பட்டணத்திற்குப் புறத்திலே விமானசகிதம் சவத்தைவைத்துச் சுற்றும் காவலாளிகளையும் வைத்துப் போயினர். கர்மி சவத்தருகேயிருந்தனள். அந்த வைசியபுத்ரியாகிய கர்மி என்பவளுக்கு அன்று நோன்பு திவசமாகையினால் அவள் துக்கித்து, 'என்னுடைய நோன்புக்கு இடையூறு வரலாகாது' என்று அங்கே மணலை அக்ஷதையாக பாவித்து ஐந்து புஞ்சமிட்டு மனோபாவ பூஜையினால் அர்ச்சித்துப் பஞ்ச பரமேஷ்டிகளையும் தியானித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்திலே அர்த்தராத்திரியிலே பத்மாவதிக்கு ஆசனம் கம்பிக்கக் கர்மியின் செயலை அவள் அவதியினாலறிந்து அந்த வைசிய புத்ரியாகிய கர்மியிடத்தில் வந்து, அவளுடைய திடசித்தத்தையும் கண்டு, சம்யத்துவத்திற்கு மெச்சி ப்ரத்தியக்ஷமாகி ரதாரூடையாகி முன் நின்று அவளைநோக்கி 'ஏ கர்மியே! நீ என்ன பாவித்துக் கொண்டிருக்கின்றாய்?' என்றுகேட்க, அந்தக் கர்மியானவள் தன்னுடைய விர்த்தாந்தமெல்லாம் சொன்னாள். அந்த பத்மாவதியானவள் அதைக்கேட்டு, 'நீ இன்றையதினம் விரதமாயிருப்பதனால் பிணத்திற்கு அண்டையிலே மணல் புஞ்மிட்டு நோன்பு நோற்பது கூடாது; பொழுது விடிவதற்கு முன்னே நீ என்னுடன் வந்தால் நான், உன்னை, நோன்பியற்றத் தகுதியான விடத்திற்குக் கொண்டுபோகிறேன்' என்றாள். அந்தக் கர்மியானவள், 'பத்மாவதியே! நான் ராஜகுமாரனுக்கு என் சரீரத்தை விற்றேன்; மனதை ஸ்ரீ பஞ்சபரமேஷ்டிகளுக்கு சலனமில்லாமல் கொடுத்தேன். ஆகலால் என் சரீரம் இவ்விடத்திற்றானிருக்கவேண்டும்; அதனால் நோன்புக்குத் தோஷம் வராது' என்றாள். அந்த வசனத்தைக் கேட்ட பத்மாவதியானவள், மகிழ்ந்து, 'கர்மியே! உன்னுடைய மனோதிடத்தைப் பரீக்ஷித்துப் பார்த்துப் பிறகு இந்தக் குமாரனை நிர்விஷம் பண்ணி ப்ராணனுடன் எழுப்பவே நான் வந்தேன்; நீ நிச்சல புத்தியாயிருந்ததைக் கண்டு உன்னை மெச்சினேன்' என்று அந்த இராஜ குமாரனை நிர்விஷம் பண்ணிப் போயினாள். அப்பால் இராஜகுமாரன் நித்திரை பண்ணி எழுந்திருந்தாற்போல் எழுந்து சோம்பு முறித்துக்கொண்டு அவ்விடத்தை நோக்கி

'இவ்விடமேது' என்று அதிசயித்துப் பின்னர், அருகில் நின்ற கர்மியைப் பார்த்து, 'நீ யார்?' என்று வினவினன். கர்மியானவள், தன் விர்த்தாந்த மெல்லாம் சவிஸ்தாரமாகச் சொன்னாள். இவ்வாறு இந்த இருவரும் பேசுகின்ற சப்தத்தைக் காவலாளிகள் கேட்டு அதிசயித்து அதிக விரைவாகச் சென்று ராஜாவுக்கும் தேவிக்கும் ப்ரதான புரோகிதர் முதலானவர்களுக்கும் அவ்வதிசயத்தை அறிவித்தனர். அரசன் முதலியோர் அந்த க்ஷணத்திலேயே புறப்பட்டு வந்து நிச்சிந்த மனதாயிருக்கிற குமாரனையும், கர்மியையும், மணல் புஞ்சங்களையுங் கண்டு கர்மியை நோக்கி, 'இதென்ன காரணம்? மணல் புஞ்சங்களெக்காரணத்தினுல் ஏற்பட்டிருக்கின்றன? இராஜகுமாரன் எவ்வாறு பிராணனைப் பெற்றான்' என்று கேட்க, கர்மி, தன்னுடைய விர்த்தாந்தங்களையும், திவ்யசாரணர் கிருபையினுல் தனக்கு உபதேசம் பண்ணின கர்ம நிர்ச்சரை நோன்பின் விவரத்தையும் அவர்கட்குக் கூறி, மேலும் 'இந்தத் தினத்திலே மனோபாவ பூஜையினுலிந்தப் புஞ்சங்களின் மேலே சாக்ஷாத் பஞ்சபாமேஷ்டிகளிருப்பதாக பாவித்து அவர்கட்கு அபிஷேகாஷ்டவிதார்ச்சனையும் சங்கல்பித்து நோன்பியற்றினேன்; அந்நோன்பின் பலத்தினுல் பவணலோகத்தினின்று பத்மாவதி ப்ரத்யக்ஷமாகி இங்கே அவதரித்து என்னுடைய மனோதிடத்தையும் பரீக்ஷித்து, என்னை நோக்கி, 'நீ அடவியிலேகாகினியாயிருப்பது கூடாது; என்னுடன் கூடவருவாயாக' வென்றனள். அதற்கு நான், 'ராஜகுமாரனுக்குச் சரீரத்தைக் கொடுத்தேன்; பஞ்சபாமேஷ்டிகளுக்கு மனத்தையும் கொடுத்தேன். இத்தகைய நான் இவர்களை விட்டு எவ்வாறு உன்கூட வாமுடியும்' என்றேன். அதற்கு மன மகிழ்ந்து, இராஜகுமாரனுடைய விஷத்தை நிர்விஷம் பண்ணி பத்மாவதி தனதிட மடைந்தனள்; யானும் இராஜகுமாரனும் இங்கே இராநின்றோம்' என்றனள். அரசன் முதலியோர் மகிழ்ந்து அவர்களை அழைத்துக்கொண்டு நகரமடைந்து அரண்மனையிற் புகுந்து கர்மிக்கும் இராஜகுமாரனுக்கும் கல்யாணம் செய்து மஹாதான சன்மானுதிகளினுல் சாதுர்வர்ணத்தார்களைச் சந்தோஷிப்பித்தார்கள். பின்னர் அரசன் சிலகாலம் ராஜ்யம் பண்ணி சகஜ வைராக்கியத்தினுல் சம்சார சரீரபோகங்களை வெறுத்து ராஜ்யபாரத்தை புத்ரன் மிசைவைத்து ஜின தீக்ஷையைக் கைக்கொண்டு உக்ரோக்ர தபச்சரணம்பண்ணி அந்தியத்தில் சரீர பாரத்தைவிட்டு அச்சுத கல்பத்தில் அச்சுதேந்திரனுபினன்'' என்று கூறினர். இவ்வாறு கௌதம கணதார், சிரேணிக மஹா மண்ட-

லேஸ்வரனுக்கும் சேலினி மஹாதேவிக்கும் கர்ம நிர்ச்சரை நோன் பின் விவரத்தைச் சொல்ல அவர்கள் அதைக்கேட்டு அந்த நோன் பையும் கைக்கொண்டு ஜிநேஸ்வரரையும் கணதரரையும் வணங்கி, கணதாரிடம் விடைகொண்டு நகரமடைந்து சுகத்திலிருந்தனர்.

ஆஸ்வியுஜமாச பூர்வபக்ஷ பஞ்சமியில் நோன்பு நோற்றுயர்ந்து ஐந்தாம் வருஷம் உத்திபாபனம்.

ஸ்ரீ பஞ்சபரமேஷ்டிகளின் ப்ரதிமைகளை எழுந்தருளப் பண்ணிச் சுபதின முகூர்த்தத்து ப்ரதிஷ்டை பண்ணி பாஜனங்களில் முன்சொன்ன க்ரமத்தினுல் உரிய மந்திரத்தோடு பாயணம் கொடுக்க வேண்டும். ஐந்துரிஷிபர்க்கு பீலி, பிடிவாய், கமண்டலம், டவணைக்கோல், ச்ருதபாவாடை இவைகள் தானம் பண்ணவேண்டும். ச்ருத பூஜையும் பண்ணவேண்டும். ஆர்யாங்கனைகளுக்குச் சேலை கொடுக்கவேண்டும்; சாதுர்வர்ணத்தார்களுக்கு ஆகாரதானம் பண்ணவேண்டும். இந்த க்ரமத்தினுல் நூறு உத்தியாபனம் பண்ணினவர்கள் இந்த ஜென்மத்தில் கர்மத்தையும் கெடுத்துச் சகல சுகாதிபதிகளாவார்கள். இந்த நோன்பை நோற்றவர்களும், நோற்பித்தவர்களும், இக்கதையைக் கேட்டவர்களும், எழுதி வைத்தவர்களும் சொர்க்காபவர்க்க பலன்களையும் பெறுவார்கள். மங்களம்.

கர்மநிர்ச்சரை நோன்பு சம்பூர்ணம்.

இங்ஙனம்

அப்பாவு உபாத்தியார்,

பேரணி.

ஜலஸ்தம்பமும், சென்னையும்.

ஜலஸ்தம்பமென்பது அறுபத்து நான்கு கலைஞான வித்தைகளுள் ஒன்று; அதாவது ஜலத்தின் இயல்பைத் தடுத்துவிடுதலாம். இன்னும் இது, யோகிகள் யோகத்தால் செய்யகூடிய அஷ்டமாசித்திகளுள் இலகுத்துவமென்னும் சித்தியைச் சார்ந்ததுமாகும். இலகுத்துவமாவது உடம்பைக் காற்றுப்போல கனமில்லாதிருக்கச் செய்தல். தேகத்தை இங்ஙனம் இலகுத்துவமாகச் செய்துவிட்டால் ஜலத்திலும் அழுந்தாமல் சஞ்சரிக்கலாம்; ஆகாய கமனமும் செய்யலாம். இந்தச் சித்தி சுவாசப் பழக்கமென்னும் பிராணுயாமத்தினுல் கைகூடுவதாம். இதனையும், மற்ற சித்திகளையும் யோகிகள் எதன்பொருட்டுச் செய்வதெனில், தங்கள் யோகம் கைகூடி வந்ததாவென்பதைப் பரீக்ஷிக்கும் பொருட்டேயாம். இந்தச் சித்திகள் நடைபெறின் அம்மகான்கள் தங்களுடைய பிராணுயாமப் பழக்கம் முதிர்ந்த நிலைக்கு வந்துவிட்டதென் றுணர்ந்துகொண்டு பின்

ணர் அச்சித்திகளை விடுத்துத் தீவிரயோகத்திலிருந்து முத்தியெய்துவர். ஆகலின், சித்திகளாற் பயனின்றென்பது அவர்கள் கொள்கை. எனினும், சித்திகள், யோகஸாதன செயல்களால் நடைபெறும் ஒருவகைச் செயல்களென அவர்களால் கருதிச் செய்யப்படும். இவற்றில் அவர்கள் எவ்வித விருப்பமும் பெருமையும் பாராட்டமாட்டார்கள்; அவர்களுடைய நோக்கமெல்லாம் சிந்தையை அடக்கி ஏகத்துவமடைவதிலேயே இருக்கும். இதனை,

“ கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமு மிளமையோ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும்புகு தலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மே லிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந்தமே.”

என்னும் தாயுமானவர் திருவாக்கா லுணரலாம். இவ்வாறு மகான்களால் சித்திகள் உயர்ந்தனவாகக் கருதப்படாவிடினும் அவர்களிடம் அச்சித்திகள் நடைபெறும்போது உலகத்து ஜனங்கள் அவற்றை தெய்விகச் செயல்களென்று கொண்டாடி, அச்செய்கைகட்குரிய மகான்களை உண்மை யோகிகளென்று நினைத்து அவர்களிடத்தே மிக்க பக்தி செலுத்துவது வழக்கம். ஆனால், முற்காலத்திலிருந்த ஜனங்கள் அந்தச் சித்திகள் சாஸ்திரப்படி சரியாயிருந்தால் மாத்திரமே அவற்றைக் கொண்டாடுவார்கள். இக்காலத்து மாக்களோ கண்மூடித்தனமாய்க் கண்டதையெல்லாம் செயற்கரிய செயலென்று நினைத்துக் கொண்டாடத் தலைப்பட்டு விடுகின்றனர். அதிலும் சென்னையில் முழுமோசம். முழுமோசக்கபட சன்னியாசிகளால் சென்னை வாசிகள் எளிதில் ஏமாற்றப் படுகிறார்கள். சில மாதங்களுக்கு முன்னும் சில வருஷங்களுக்கு முன்னும் சென்னையில் இரண்டு வேடச்சன்னியாசிகளால் ஜலஸ்தம்ப ஏமாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கேட்டால் அறிஞர் அதிசய முறுவர். அவற்றைக் கூறுமுன் உண்மையான ஜலஸ்தம்பத்தின் தன்மையைக் கூறிவிட்டு அதன் மேல் நடந்தவற்றைக் கூறுவாம்.

யோகிகளாற் செய்யப்படும் உண்மையான ஜலஸ்தம்பமாவது உடம்பை இலகுத்துவம்செய்து ஜலத்திற்குள் அவயவங்கள் அழுந்தாமல் அதில் சஞ்சரித்தலாம். உடம்பு சிறிதும் அழுந்தாமல் ஜலத்தின் மேலே சயனத்திற்படுப்பது போற்படுப்பதும், உட்கார்ந்திருப்பதும், நடப்பதுமே ஜலஸ்தம்பமாம். ஜலஸ்தம்பம் இப்படித்தான் இருக்கவேண்டுமென்பதை, மேற்கூறிய தாயுமான சுவாமி பாடலில், 'ஜலமேல் நடக்கலாம்' என்றிருப்பதனால் உணர்ந்து கொள்ளலாம். இதற்கு மாற்றமாக உடம்பு சிறிது நீருக்குள் அழுந்தினாலும் அது ஜலஸ்தம்பமாகாது. நீந்தப்பழகிக்கொண்டவர்கள் உடலில் பெரும்பாகம் மேலே தெரியும்படி மிதந்துகொண்டாவது, உடல் முழுவதும் நீரில் மறையத் தலையை மாத்திரம் வெளியில் நீட்டிக்கொண்டாவது கால்களாலும் கைகளாலும் நீரைத்தள்ளிக்கொண்டு ஜலத்திற் செல்லலாம். மிதந்தபடியாவது தலையை நீட்டியபடியாவது ஓரிடத்திற் கிடக்கலாம். அதிக நேரம் வரையிலும் கூட இப்படிச் செய்து கொண்டிருக்கலாம். நாட்டுப்புறத்திலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர் நீந்தத்தெரிந்தவர்களாதலால் அவர்கள் இரண்டு மூன்று மணி நேரம் வரையிலும் கூட இவ்வாறு நீந்திக்கிடந்து ஜலத்தில் விளையாடுவார்கள். எம்மால் ஒரு மணி நேரம் நீரில் நீந்திக்கொண்டிருக்க முடியும். இவைகளெல்லாம் சாமானியர்கள் நீந்தும் பழக்கத்தால் செய்யக்கூடியவைகளே. ஜலஸ்தம்பத்திற்கும் நீந்தும் பழக்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள் இவைகளே.

இவற்றின் தன்மைகள் இங்ஙனமிருப்ப, சில வருடங்களுக்கு முன்னே வேட சன்னியாசி யொருவர், ஒரு தினம் சென்னைக் கிருஷ்ணப்ப நாயக்கன் குளத்திலும், மற்றொரு தினம் சென்னைகேசவப்பெருமான் கோவில் குளத்திலும் வீழ்ந்து சாதாரண ஜனங்கள் நீந்துவதுபோல் சிறிது நேரம் நீந்திக்கொண்டு போவதும் சிறிது நேரம் ஓரிடத்தில் மிதந்துகொண்டு கிடப்பதுமாக அரைமணி நேரம் விளையாடினார். இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு போலிச் சாமியார் பல போலிப்பக்தர்களுடன் பஜனை செய்துகொண்டே வந்து சென்னைக் கச்சாலேசுவரர் கோவில் குளத்தில் திடீரென்று வீழ்ந்து சிறிது நேரம் ஜலத்தில் நீந்திக்கொண்டு சுற்றி விளையாடி முடிவில் ஈசானி மூலையில் வந்து தலையை மாத்திரம் வெளியில் நீட்டிக்கொண்டு கால்கைகளை உதைந்து அரைமணி நேரம் நீந்திக்கிடந்தார். அவ்விடம் காலுக்குத் தரை எட்டுமிடமாகவு மிருந்தது. அதனால் அவர் காலைத்தரையில் ஊன்றிக்கொண்டும் நின்றிருத்தல் கூடும். சிறிது நேரத்திற் கொருமுறை ஜனங்கள் சந்தேகப்படாதிருக்கும் வண்ணம் கால்களை மேலே கிளப்பிக் காட்டிக்கொண்டு மிருந்தார்.

இவ்விரண்டு சாமியார்களும் மேற்கூறிய குளங்களில் வீழ்ந்த சமயங்களில் இவர்களின் போலிச் செய்கைகளைக் கேட்டவுடனே அதிசயமடைந்து புரண்டதையா பட்டணம் முழுவதும்! பல்லாயிரக் கணக்கான ஜனங்கள்வந்து கூடிவிட்டார்கள். நாமும் இந்த வேடிக்கைகளைப் பார்க்கப் போயிருந்தோம். மேலும்மேலும் ஜனங்கள் வந்து கூடிப் பிரமித்துக்கொண்டே யிருந்தார்கள். அவர்களுள் ஒருவராவது, 'இது சாமானியர்கள் செய்யும் நீர் விளையாட்டு' என்று உணர்ந்து கொள்ளவில்லை. எல்லோரும், 'இது மகான்கள் செய்யும்

ஜலஸ்தம்பமே, என்று தீர்மானித்து விட்டார்கள். சாமியார்களைத் தெய்வங்களென்றே கருதி விட்டார்கள்; அவர்களுடைய கடைக்கண்பார்வை நம்மீது பட்டாலே போதுமென்று அவர்களிருக்கும் திக்கை நோக்கி வணங்கினார்கள்; சிலர், "ஐயா! இக்காலத்தில் மகான்கள் இல்லையென்றும், அருமையான சித்திகள் இல்லையென்றும் அறிவீனர்கள் சொல்கின்றார்களே; இதோ அவற்றை நாம் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்றோமே" என்றார்கள். இங்கிலீஷ் படித்த சில மேதாவிகளுங் கூட "சார்! இது மெத்த டிபிகெல்ட் சார்; நம்முடைய பீப்பிள் சொல்லுகிற சாஸ்திரங்களும் உண்மைபோலவே தோற்றுகின்றன" என்று வியந்து கொண்டார்கள். சில கற்றறிமோழைகள், "இந்த ஜலஸ்தம்பம் கஷ்டமானது தான்; எனக்கும் கொஞ்சம் தெரியும்; ஆனால் நான் இவ்வளவு நேரம் கிடக்கமாட்டேன்; இவர் மகான் யோகப் பழக்கத்தால் இவ்வாறு அதிக நேரம் கிடக்கிறார்" என்று நடிப்பு ஞானம் பேசினார்கள். சாமியார்கள், கோவிலோ மடமோ கட்டவேண்டுமென்று ஜனங்களிடம் எளிதாகப் பணம் வசூலிப்பதற்கு ஜனங்களைத் தம் வசப்படுத்தும் பொருட்டு இந்த நடிப்பு ஜலஸ்தம்பம் செய்ததாகத் தெரிந்தது. இதை யுணர்ந்த சிலர், சித்திகளின் உண்மைகளை யுணர்ந்தவர்கள்போல், 'இது மோசம் சார்' என்று மாத்திரம் சொல்லிக்கொண்டு போனார்கள். ஆனால் ஜலஸ்தம்பத்தின் உண்மையைப்பற்றி இவர்கள் ஒன்றுமே உணரார்கள். சில நாட்டுப்புறத்தார்கள் மாத்திரம் நீந்துதலின் தன்மையைத் தெரிந்தவர்களாதலின், சாமியாரின் செய்கைகளையும், ஜனங்களின் பிரமிப்பையும் பார்த்து ஏளனஞ்செய்து நகைத்தார்கள். அவர்களுடைய பரிகசத்தை எவரும் பொருட்படுத்தவில்லை. எல்லோரும் சாமியார்களின் மாயையில் மூழ்கிக்கிடந்தனர். என்னே அறியாமை! இவர்கட்கு நாட்டுப்புறத்தார்களைப்போல் நீந்தும் பழக்கமில்லாமையாலும், நம் சாஸ்திரக்கருத்துக்களை உணரும் சக்தி யொழிந்ததாலுமன்றோ இதனுண்மை புலப்படவில்லை. மேல்நாட்டுக்கல்வியும் நாகரிகமும் பரவப்பரவ நம் நாட்டவர் இத்தகைய பேதைமைகளில் முன்னேற்ற மடைந்து வருகின்றார்கள். இதுபோலவே சென்னையில் இன்னும் உண்மைத்தொழில்களெல்லாம் மறைந்து போலித்தொழில்களெல்லாம் தலையெடுத்தோங்கிப் பொது ஜனங்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஜலமேல் நடப்பதும் இருப்பதும் தான் ஜலஸ்தம்பம் என்று, ஆங்கிலங் கற்ற ஓர் இந்தியரிடம் கூறினால், அவர், 'இஃதியற்கைக்கு விரோதமான பாட்டிகதை சார்; இந்தச் சாமியார்கள் இப்பொழுது நீந்திக்கொண்டு கிடந்தார்களே இதுதான் சரியான ஜலஸ்தம்பம்' என்று தம்முடைய இரண்டுங் கெட்ட இயற்கை ஞானத்தைக்கொண்டு முடிவு கூறிவிடுவார். இது பிராணாயாமத்தின் தன்மை யுணராக்குறைவே. யோக சாஸ்திரவுண்மை யுணர்ந்தமேல்நாட்டினரும் தாயுமானவர் கூறியதையே ஜலஸ்தம்பமென ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் மனோதத்துவ சாஸ்திரவுணர்ச்சியால் இத்தகைய சித்திகளை யெல்லாம் இக்காலத்திலும் கூடச் செய்து வருவதால் இதன் உண்மையை உணர்வார்கள். இரண்டுங்கெட்ட நம்மவர்கள்தாம் நல்லதைக் கெட்டதென்றும், கெட்டதை நல்லதென்றும் மனம்போனபடி பேசுவார்கள். மதுரை ஜில்லாவிலுள்ள பெரிய கோட்

டையிலிருந்த மகான் ஒருவர் பல வருடங்கட்கு முன்னர் ஜலத்தில் நடந்ததாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்; அவர் பரம்பரையில் வந்தவராய் இப்பொழு திருக்கும் சாமியாரைக் கைகளைக்கட்டி வேறுவழியில்லாத ஒரு வீட்டிற்குட் போட்டுப் பூட்டிவிட அவர் வெளியில் வந்துவிட்டதையும் இன்னும் பல சித்துக்கள் செய்ததையும் நாம் சிறுவயதாயிருக்கும்போது பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கிறோம். இப்படியெல்லாம் உண்மைத்தொழில்கள் இருக்கும்போது இக்காலத்தவர் அவற்றை யுணராமல் போலித்தொழில்களைக் கொண்டாடத் தலைப்பட்டிருக்கின்றனர். இந்தப் போலிச்செய்கையைப் பற்றிப் பத்திரிகைக்காரர்களாவது கண்டித்தெழுதி ஜனங்களுக்குப் புத்தி கூறினார்களா வென்று பார்த்தால் ஒருவரும் இதைப்பற்றி எழுதவில்லை. இக்காலத்தில் இப்படியிருக்கிறது தென்னாட்டின் ஞானத்தின் கதி. இனி, இது, போகப்போக எப்படியாகுமோ தெரியவில்லை. எங்கும் நிறைந்த பரம்பொருள்தான் திருவருள் புரிந்து உண்மை ஞானத்தை நம்நாட்டில் நிலைநிறுத்தவேண்டும்.

வீ. ஆறுமுகஞ்சேர்வை.
மதுரைஜில்லா, செம்பூர். வித்வான்.

சிரிக்கும் தீர்மானங்கள்.

இப்போது, நம் இந்து மாதுசிரோமணிகள் தலையில் கிராப்வைத்து முன் பக்கம் மயிர்களைப் பலவிதமாக வெட்டி அற்புத வளைவுகளாகச் செய்து விடுவதும், மஞ்சளை அகற்றிவிட்டு வெள்ளைப்பொடிகளை முகத்தில் ஒற்றிக்கொள்வதும், மேல்நாட்டு நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டிருப்பதும், சுயேச்சையாகத் தனியே வெளியேறித் திரிவதும் தற்கால நாகரிகத்திற்கு மிகவும் திருப்திகரமாயிருக்கின்றன; இனி, அவர்களுக்கு முகத்தில் மீசையுண்டாகும்படி உபயோகிக்கத்தக்க ஒரு மருந்தைக் கண்டுபிடித்துக் கொடுத்து மீசையையும் வளர்க்கும்படி செய்துவிட்டால் இன்னும் நாகரிகம் மெத்த அழகாயிருக்கும் என்று நவீன நாகரிகக் கமிட்டியார் ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்களாம்.

தென்னிந்தியா ரெயில்வண்டிகளில் இப்போது மூச்சுவிட முடியாதபடி ஜனக்கூட்டம் அதிகமாக ஏறி நெருக்கினபோதிலும் எங்களுக்கு உடம்பில் சரியாக வேர்வை வெளிப்பட்டுத் தினவு தீரவில்லை. ஆதலால் தினந்தோறும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஒவ்வொரு டிராமா நடக்கும்படி செய்துவிட்டால் இன்னும் கூட்டம் அதிகரித்து எங்கள் உடம்புத் திமிர்தீருமென்று நெருக்கடிக் கமிட்டியார் ஒரு தீர்மானஞ்செய்து ரெயில்வே அதிகாரிகளுக்கு ஒருமனுச் செய்துகொண் டிருக்கிறார்களாம்.

நாடக மேடைகளில் புதிய நாகரிகத்தின்படி ஆக்ட்செய்யும் ஆக்டர்களில் பெரும்பான்மையான உயர்ந்த ஆக்டர்கள் சுருதியையும் தாளத்தையும் விட்டு விட்டுப் பாடுவது நாகரிகர் காதுகளுக்குத் தேனைப்போல் இனிமையாயிருக்

கின்றது. ஆயினும், இன்னும் இந்தச் சங்கீதத்தின் இனிமையை அதிகப்படுத்துதற்கு ஐந்தாறு குண்டுக்கழுதைகளுக்கு நாடக உடையணிந்து, அவற்றை ஸ்டேஜில் நிறுத்தி அவற்றின்காதில் பெரிய எறும்புகளைக் கடிக்கவிட்டுக் கதறும்படிசெய்தால் பிரமானந்தமா யிருக்குமென்று பூஜ்ஜிய சங்கீத நாகரிகக் கமிட்டியார் தீர்மானஞ்செய்து, வண்ணார்களிடம் ஆகாரமின்றிப் பாரந்தாங்கிக் கஷ்டப்படும் கழுதைகளை வந்து ஆஜராகும்படி அவற்றிற்கு நோட்டிஸ் கொடுத்திருக்கிறார்களாம்.

தற்கால நாகரிகத்தையொட்டி மங்கைப் பருவமுள்ள அழகிய பெண்மணிகள் பாகவதர்களாக வெளியேறி உயர்ந்த நாகரிகப் படிப்பாளர்க்கு நடுவில் நின்று காலக்ஷேபம் செய்வதால் நாகரிக அந்தரங்க பக்தி ஆடவர்கட்கெல்லாம் ததும்பி வழிகின்றது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. இன்னும் இந்தப் பக்தி மிகுந்து பிரமானந்த நிலையை அடைய வேண்டுமானால், இந்தக் கதாப் பிரசங்கங்களை ஆங்கில பாஷையில் செய்யும்படி அந்தபக்தாமிர்த பெண்ணிரத்தினங்களைப் பழக்கி விடவேண்டுமென்று நவீன கதாகாலக்ஷேப ஸொஸைட்டியார் தீர்மானஞ் செய்திருக்கிறார்களாம்.

புதிய வர்த்தமானன்.

தஞ்சையில் ஜைன ஸமஸ்கிருத பாடசாலை.

தஞ்சையில் மகா தர்மிஷ்டராய் விளங்கிக் கொஞ்சக் காலத்திற்கு முன்னர், இவ்வுலகத்தைத்துறந்த ஸ்ரீமத். பொன்னுசாமி முதலியாரவர்கள் ஜைன ஸமஸ்கிருத பாடசாலைத் தருமத்திற்கு 5½ ஏக்கர் சர்வமானிய நிலத்தையும், ரூ. 3000 ரூபா மூவாயிரத்தையும், ஒரு வீட்டையும் மூலப்பொருள்களாக வைத்து, அவற்றைக்கொண்டு ஷை பாடசாலையை நடத்துதற்குத் தஞ்சைக் கரந்தட்டாங்குடி, கனம். நேமிநாத முதலியாரவர்களை டிரஸ்டியாக ஏற்படுத்தி உயில் எழுதி வைத்துவிட்டுச் சென்றபடி, நாளது உருத்திரோற்காரிஸு சித்திரை ஸ்ரீ 11உ சுக்கிலபக்ஷம், ஸப்தமிதிதி, சோமவாரம், புனர்பூச நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில், உதயாதி நாழிகை 18¼-க்கு மேல், 22½-க்குள் அதாவது பகல் மணி 1, நிமிஷம் 20-க்கு மேல், 3-க்குள் சிம்மலக்கினத்தில், கரந்தட்டாங்குடியில் கனம். நேமிநாத முதலியாரவர்களால் ஷை பாடசாலை ஸ்தாபிக்கத் தொடங்கி ஸ்ரீ கோவிலில், ஸ்ரீ விருஷபசுவாமிக்கும், சாஸ்வதிதேவிக்கும் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து, ஆகமபூஜை, சாஸ்வதிபூஜை முதலியவைகள் நிறைவேற்றி, சாஸ்வதி தேவியை ஸ்தோத்திரம் செய்து பிரார்த்தித்து, அதே லக்கினத்தில் குருமார்களைக்கொண்டு பதினொரு பாலர்களுக்கு ஸமஸ்கிருத அக்ஷராப்பியாசமும், ஒன்பது பிள்ளைகளுக்கு சப்தபாடமும் ஸ்ரீ கோவில் சந்நிதியில் ஆரம்பம் செய்யப்பெற்று, அதன்மேல் ஆசிரியர்களும், வித்தியார்த்தி

களும், மற்ற சிராவக சிராவகிகளும் மேளவாத்தியத்துடன் ஸ்ரீ கோவிலைப் பிரதக்ஷணஞ்செய்து ஸ்ரீ மடாலயத்தில் விஜயமாய் அமர்ந்து, எல்லோராலும் அங்கே ௸ ஸமஸ்கிருத பாடசாலை ஸ்தாபிக்கப்பெற்றது. சகலருக்கும் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன. இப்பொழுது ௸ பாடசாலைக்கு நான்கைந்து பிராமணச் சிறுவர்களும் கல்விகற்க வந்திருக்கிறார்கள். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லும்பொருட்டு ஸமஸ்கிருத வாத்தியார் ஒருவரும், எலிமெண்டரி ஸ்கூல் வாத்தியார் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பாடசாலை எப்பொழுதும் நிலைத்தோங்குமென்பது திண்ணம்

இங்ஙனம்.
கரந்தை வாசி.

குறிப்பு.

இந்தப் பாடசாலை ஸ்தாபனத்தைப் பற்றி நாம் மிகவும் திருப்தியடைகிறோம். இதற்கு மூலதனம் வைத்துச்சென்ற கனவானுடைய தரும சிந்தனையும், டிரஸ்டியாக ஏற்பட்டு உழைத்துவரும் முதலியாரவர்களுடைய பெருங்குணமும் அறிஞரால் மிகக் கொண்டாடத்தக்கவை. ஒரு சமூகத்தார் விருத்தியடைவதற்குக் காரணம் கல்வி யபிவிருத்தியே யென்பதை நன்குணர்ந்து இவர்கள் பாடசாலைத் தருமத்தை ஸ்தாபித்தது உலகினரெல்லோருமே மெச்சக்கூடியதாம். இதுபோலவே இன்னும் சில ஜைன தருமபாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனினும் இவைபோதாவென்பது எமதபிப்பிராயம். நம் ஜைனசமூகம் விசேஷ விருத்தி யடையவேண்டுமானால் இன்னும் ஆங்காங்கே ஜைனர்களிருக்கும் பற்பல விடங்களில் பற்பல பாடசாலைகள் தனவந்தர்களால் ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் நம் ஜைனமதம் தழைத்தோங்கி வளரும். நம்நாட்டில் நம்மவருள் விசேஷ தனவந்தர்களிருந்தும் இத்தகைய தர்ம காரியங்களில் பிரவேசியாதிருப்பது மிக விசனிக்கத்தக்கது. இனியேனும் ஜைன கனதனவான்கள் இத்தகைய ஸ்கூல் விஷயங்களிலும், சாஸ்திரப் பிரசுர விஷயங்களிலும், பத்திரிகைப் பிரசுர விஷயங்களிலும் புத்தியைச் செலுத்தி அவற்றிற்குத் தம் தம்மாலியன்ற பொருளுதவி செய்து ௸ பாடசாலைகளையும், நம் தருமசிலன்போன்ற பத்திரிகைகளையும் ஆதரித்து நம் ஜைனசமூகத்தை முன்னேற்ற மடையச் செய்யுமாறு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்.
பத்திராதிபர்.

தருமசீலன் ஆறுவதாண்டின் வாழ்த்து.

நிலமண்டில வாசிரியப்பா.

திகழ்பாஞ் சுடரின் றிருவருளதனுல்
புகழ்பர விடுமா புரியாஞ் சென்னையில்

தரும சீலனுந் தகுதியா வுதித்து
அருமை யுடனைந் தாண்டுகள் பூர்த்தியாய்ப்

பண்புசால் ஆறும் பருவ மெய்தினன்
எண்புவி போற்றும் இவனுக் கென்றும்

அரும்பெருங் கடவுள் அருளது புரிக
விரும்பிடு மிவனும் மேன்மே லோங்குக

நந்தமிழ் நாட்டின் நன்மைசேர் பொருளினர்
செந்தமிழ்ப் பாஷையைச் சீருடன் வளர்க்கச்

சீலனுக் கேற்ற திருக்கிள ருதவி
சாலவே செய்க சார்ந்தபல் வகையிலும்

வித்தையிற் சிறந்த விற்பன விவேகிகள்
உத்தம மாகியே உலகெலாம் பாவும்

பைந்தமிழ்ப் பாஷையில் பண்புற நாளும்
நந்திருச் சீலனில் நலனுற வியாசம்

பரிந்து வரைந்து பாங்குடன் வாழ்க
புரிந்தசீ லனைத்தினம் புலனுறப் படித்து

ஆடவர் பெண்டிரும் அறிவுட னோங்குக
நாடிய மாணவர் நற்பய னடைக

குணமது பெற்றுக் குவலயம் வாழ்க
வணமிகு கல்வி மாண்பும் மதியும்

மாதர்க் கேற்ற வழுவிலா வொழுக்கமும்
மாதவத் தோர்கள் வழுத்து நீதிகளும்

தக்க ஜினமத தத்துவப் பொருள்களும்
ஈக்கணந் தனிலு மெடுத்து விளக்கும்

சீலன் வாழ்க சிறந்தபத் திராதிபர்
மேலவன் அருளால் மிகமிக வாழ்க

தந்திடும் பொருளைத் தடையிலா தளிக்கும்
சந்தா நேயர்கள் சந்ததம் வாழ்க
எண்டிசை புகழும் எழிலுறு சீலன்
விண்டிடும் பல்லாண்டுகள்மிக விளங்கி
வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க
வாழ்க வாழ்க நீடூழி வாழ்க.

ஓம் தத்ஸத்,

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை.
தமிழ் நாவலன், மங்கநல்லூர்.

பிராணிகளைப்பற்றிய ஆச்சரியங்கள்.

யானையின் துதிக்கையில், மற்ற எல்லாப் பிராணிகளின் உடல் முழுதிலு மேற்பட்டுள்ள * தசை நார்களைக்காட்டினும் அதிகமான தசைநார்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று ஆராய்ச்சிக்காரர் கணக்கிட்டிருக்கிறார்கள். ஷை துதிக்கையில் மட்டும் (40,000) நாற்பதினாயிரம் தசைநார்கள் இருக்கின்றனவாம். மனிதனுடைய தேகத்தில் 527. தசைநார்கள்தா மிருக்கின்றனவாம். துதிக்கையில் இவ்வளவு தசைநார்கள் ஏற்பட்டிருப்பதனாலேயே யானை தன்னுடைய துதிக்கையை எந்தத்திசையினும் திருப்பக்கூடியதா யிருக்கிறது.

குதிரை கெட்டியான உணவில்லாமல் நீரைமட்டும் பருகிக்கொண்டு 25. நாள் ஜீவித்திருக்கும். 17. நாள் வரையில் ஆகாரமும் ஜலமும் இல்லாமல் பிழைத்திருக்கும். ஜலமில்லாமல் கெட்டிப் பதார்த்தத்தை மட்டும் தின்றுகொண்டு 5. நாள் வரைதான் ஜீவித்திருக்கும்.

ஆடுகளுக்கு மேல்வாய்ப் பல்கிடையாது. சிலதேசங்களிலுள்ள ஆடுகளுக்கு வாயில் அதிகபலமிருக்கிறதாம். பெரிய வண்டிகளையெல்லாம் வாயில் கட்டிவிட்டால் அவை இழுத்துக்கொண்டு செல்லுமாம். அவ்வாயில் மிகுந்த கொழுப்பிருப்பதாக ஆராய்ச்சிக்காரர் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

---

* இயக்கத்திற்குரிய அடுக்கடுக்கான தசைப்பற்று.

முயல்களுக்குக் கண்ணிமை கிடையாது. ஆதலின் அவை எப்பொழுதும் கண்ணை மூடுவதில்லை. அவற்றின் கண்ணிமையிருக்கும் ஸ்தானத்தில் மென்மையான தோல் ஒன்று காணப்படுகிறது. அவை தூங்கும்போதும் இளைப்பாறும்போதும் இத்தோல் தான் கண்ணை மூடுகிறது.

சில பிராணிகளுக்குக் கழுத்தைத் திருப்பாமல் பின்னே யிருக்கும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளும்படியான சக்தி அமைந்திருக்கிறது. பூச்சிகளுக்கு இத்தன்மை அதிகமாயுண்டு. ஒரு ஈயின் பின்புறத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாகக் கையைக்கொண்டு போன போதிலும் கைவருவதை அது தெரிந்துகொள்ளும். முயல்களுக்கும் இத்தன்மை உண்டு. வேட்டைநாய் எவ்வளவு நிசப்தமாகச் சென்றபோதிலும் ஓடி முயல்கள் பின்னேவரும் அந்நாயைத் தெரிந்துகொள்ளும். இன்னும், குதிரைகளுக்கும் இந்தச் சக்தியுண்டு. இதை நாம் ஒவ்வொருநாளும் அவைகளிடத்தில் பார்க்கலாம். வண்டியிற்பூட்டி ஓடும் குதிரைகளின் கண் பின்பக்கத்தில் மறைக்கப்பட்டிருந்தபோதிலும் ஓட்டுகிறவன் சவுக்கைக் கையிலெடுத்தவுடன் அவை வேகமாக ஓட ஆரம்பிக்கும். ஒட்டகச்சிவிங்கியென்னும் மிருகத்துக்கும் பின்பார்வையுண்டு. அதனாற்றான் அம்மிருகத்தைப் பிடிப்பது கஷ்டசாத்தியமா யிருக்கிறது.

முயல்களுக்கு வம்சவிருத்தி அதிகம். அவை வருஷத்துக்கு 7. முறை குட்டிபோடும். ஒவ்வொரு முறையிலும் 4. முதல் 12. வரையில் குட்டிகள் உண்டாகும். ஆணும் பெண்ணுமாகிய இரண்டு முயல்களை 4 வருஷகாலம் வைத்துக் காப்பாற்றினால் அவற்றால் பத்தேகால் இலட்சம் முயல்கள் உண்டாய்விடுமென்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். ஆஸ்திரேலியாவில் முற்காலத்தில் முயலே கிடையாது. கொஞ்சக் காலத்துக்கு முன்தான் வேறு தேசத்திலிருந்து அங்கே இது கொண்டுபோகப்பட்டது. அவ்வாறு கொண்டுபோகப்பட்ட முயலால் இப்போது அத்தேசத்தில் எண்ணத் தொலையாத முயல்கள் உண்டாகி அவற்றின் மிகுதியால் பயிர்ச்சேத முதலிய நஷ்டங்கள் அதிகரித்து வருகின்றன.

பன்றிகளின் கூட்டமும் இவ்வாறே அதிகரிக்கும். ஒருபன்றி 15. வருஷம் முதல் 20. வருஷம் வரையில் ஜீவித்திருக்குமாம். இது பிறந்து 10. மாதம் ஆனவுடன் தானும் குட்டிபோட ஆரம்பிக்கும். ஆணும் பெண்ணுமாக இரண்டு பன்றிகளை 10. வருஷகாலம் வைத்

திருந்தால் இவற்று லுண்டாகும் குட்டிகள், தடவை ஒன்றுக்கு 6 வீதம் கணக்கிட்டபோதிலும் (64,34,838) அறுபத்து நான்கி லட்சத்து முப்பத்து நாலாயிரத்து எண்ணூற்று முப்பத்தெட்டாகப் பல்கிவிடுமாம். ஒரு மனிதனுக்கு ஆண்பெண்ணாகிய ஓர் இணைப் பன்றிகளும் மேய்ப்பதற்குச் சில ஏக்கர் நிலங்களும் கிடைத்தால் 10 வருஷகாலத்தில் அவனிடத்தில் 10. இலட்சக்கணக்கான பன்றி கள் பெருகிவிடும். இதைப் பொய்க்கணக்கென்று நினைக்கவேண் டாம். ஒருபன்றி 20. வருஷகாலத்தில் 20 தடவையில், 355. குட் டிகளை யீன்றதாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். இக்கணக்கின் படியே அக்குட்டிகளுக்குண்டாகும் குட்டிகளையும், அவற்றிற்குண் டாகும் வேறு குட்டிகளையும் பெருக்கிக் கொண்டுபோனால் எத்தனை பன்றிகள் ஆகுமென்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். இங்கிலாந்தில் நடந்த கண்காட்சி சாலையில் பிறந்து, 20. மாதம் சென்ற ஆண்பன்றியொன்று அடைத்து வைக்கப்பட் டிருந்தது. அது 1466. பன்றிகளுக்குத் தகப்பனாயிருந்ததாக அங்குள்ளோர் கணக்கிட் டிருக்கின்றனர்.

ஆந்தையின் கண் புரள்வதில்லை. அது உருண்டை வடிவமாக முகத்தில் ஆணியால் அறையப்பட்டதுபோல் பதிக்கப்பட்டிருக் கிறது. இவ்வாறிருந்த போதிலும் அவ்வாந்தையின் கழுத்தில் சுழலுந்தன்மையாகிய நயம் ஏற்பட்டிருப்பதால் அது உடம்பைத் திருப்பாமலும் கண்களைச் சுழற்றாமலும் தலையை எந்தத்திசை யிலும் திருப்பி எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும்.

கழுகு மணி 1 க்கு 100. மைல்வீதம் பறக்குமாம். நாரையும், அடைக்கலங்குருவியும் மணி 1-க்கு 90. மைல் வீதம் செல்லுமாம். சாதாரணமான காக்கைக்கு மணி 1-க்கு 25 மைல் வீதம் பறக்குந் தன்மையுண்டாம். புறாக்கள் மணி 1-க்கு 60 மைல் முதல் 80. மைல் வரையில் பறந்து செல்லுமாம்.

லோகாதிசய விளக்கம்.

—

மகாநஷ்டமான சர்வமேகரோகங்களையும் போக்கி
இரத்தவிர்த்தியையும் தாது புஷ்டியையும்
தேகதிடத்தையும் தரத்தக்க

அமிர்தசஞ்சீ லேகியமும் ஸ்தம்பனுதி செந்தூரமும்.

பால்ய சேஷ்டையாலும் அறிவீனத்தாலும் தீக்குணமுடையோர் சினேகத்தாலும் பற்பல தகாத செய்கைகளினாலும் விஷய இன்பத்தில் அளவுமீறி நடந்து, தேகமெலிந்து தாதுநீர்த்து இடுப்பு கைகால் முதலிய அவயவங்கள் பல ஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து கிழத்தன்மை யடைந்து, சோம்பல் நித்திராபங்கம், சதாகாலமும் சிற்றின்பத்தில் கவலை, மனோவேதனை முதலியவற்றிற்கு ஆளாகி நிற்கும் புருஷர்களுக்குச் சகல துர்க்குணங்களையும் போக்கிச் சுகத்தைத் தரக்கூடிய இன்ப அமிர்தங்கள் இவைகளே.

இவற்றுள் அமிர்தசஞ்சீவி லேகியத்தில், கல்நார் பஸ்பம், அயச்செந்தூரம், வங்கபஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, பொன் அம்பர், பாதம் பருப்பு, அக்ரோட்பருப்பு, சில்கூஜாப் பருப்பு, வெள்ளரி விதை, முள்ளங்கி விதை, நாயுருவி விதை, பூனைக்காலி விதை, இஸ்கூல் விதை, முதலியனவும், 96-வித கடைச்சாக்குகளும், சாலாமிஸ்றி, சப்பேத்மிஸ்றி, போஜிதான் மிஸ்றி, சுரஞ்சான் முதலிய பலவித மிஸ்றிகளும், அரிய பல சிலாக்கிய மமைந்த சஞ்சீவிக்குச் சமானமான மலை மூலிகைகளின் சத்துக்களும், பசுநெய், மலைத்தேன், பசும்பால், முதலியவையும் அளவுக் கிரமப்படி சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்த இவ்வற்புத லேகியம் கைபாகம் செய்பாகந் தவறாமல் வெகு ருசிகரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கூறிய ஸ்தம்பனுதி செந்தூரமும் சித்தர் முறைப்படி உயர்வாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகாரவிஷயத்தில் யாதொரு நிர்ப்பந்தமும் பத்தியமு மில்லாமலே, பலவித தேகஸ்திதி யுடையவர்களும் இந்தப் பரமசிரேஷ்டமான லேகிய பஸ்பங்களை எல்லாக்காலத்திலும், எல்லாத் தேசத்திலும் சந்தேகமின்றிச் சாப்பிடலாம்.

இவ்வளவு அருமையாகச் செய்து முடித்திருக்கும் இந்தக் குருமுறை லேகியத்தையும் செந்தூரத்தையும் ஒருமுறை 48-நாட்கள் ஒருவர் புசித்தால் அவரிடம் நபும்ஸகத்தன்மையிருந்தாலும் நீங்கிவிடும். துரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம் இருக்குமிடம் தெரியாமல் ஓடிப்போம். ஆண் அங்கத்தின் சோர்வு அடியோடு நீங்கிவிடும். கை கால் அசதி, இடுப்புநோய், நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், துர்த்தஸ்திரீகளின் சகவாசத்தினால் உண்டான வெள்ளை, கொருக்கு, மேகத்தடிப்பு, மேக ஊறல், மேகவெட்டை முதலிய பயங்கரமான ரோகங்களும் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறந்துபோம். இதற்குமுன் எப்போதும் உண்டாகாத அநேக அற்புதகுணங்கள் தோற்றும். இக்குணங்களை ஒரேமுறை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சுகானந்த வைத்திய சாலா,

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

210449

வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழுநம்பிக்கை வைத்து ஒரேயொருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால் அவர்கள் அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்த லேகிய செந்தூரங்களினால் உண்டாகும் அற்புத குணத்தைக் தெரிந்துகொண்டபின், இவற்றிற்கு மற்றவரிடம் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள் நேயர் முதலியோர்க்கு நீங்களே இவற்றின் சிறந்த குணத்தையும், நீங்கள் இவற்றாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக் கூறிச் சிபாரிசு செய்வீர்களென்பது நிச்சயம்.

நாம் இந்த அமிர்தசஞ்சீவி லேகிய செந்தூரங்களைப்பற்றி ஏன் இப்படிப் பன்னிப்பன்னிக் கூறுகிறோமென்றால் இவற்றின் குணங்கள் அவ்வளவு சிறந்தவை. இந்த லேகிய செந்தூரங்களை விசேஷமாய் நாம் கையாள ஆரம்பித்து ஏறக்குறைய 80-வருஷங்கள் ஆகின்றன. இது வரையில் இவற்றால் நமக்கு நல்லபெயரும் கீர்த்தியும் உண்டாய் வருவதோடு எண்ணிறந்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் கிடைத்து வருகின்றன. சிற்றின்ப சுகத்தை இஷ்டப்படி அனுபவிக்கும் ஆற்றலைத் தருவதில் முதன்மையானவை இந்த லேகியசெந்தூரங்களே யென்று எமது அனுபவத்தில் கண்டு தீர்மானித்திருக்கிறோம்.

1-மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய செட் 2-க்கு ரூ. 6 0 0

½-மண்டலம் 24-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய செட் 1-க்கு ரூ. 4 0 0

சுகபேதி மாத்திரை

